# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, மே மாதம் 19 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 19.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

## *2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

*[2006 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]*

*ச. வ. ஓ 7 /2005*

***நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக் கான விசேட கவனத்துடன் இலங்கையினுள் தொழில்முயற்சி அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும், ஆதரிப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும் மற்றும் வசதியளிப்பதற்கும், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினைத் தாபிப்பதற் கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** *இச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டமென எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.*

### ***தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபித்தல்***

*தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையைத் தாபித்தல்.*

***2.*** *(1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை என்றழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப் படுதல் வேண்டும்.*

*(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறாவழியுரிமை யும் பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பெயரைக் கொண்டு அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.*

2 – PL 000947 – 1,275 (2006/01)

*அதிகாரசபையின் சபையை அமைத்தல்.*

**3.** (1) அதிகாரசபையின் அலுவல்களின் முகாமைத்துவம் அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வருவோரைக் கொண்ட சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் :-

(அ) இரண்டு பதவிவழி உறுப்பினர்கள், அதாவது -

(i) திறைசேரிச் செயலாளர் ; அத்துடன்

(ii) அதிகாரசபைக்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் ; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிதி, வர்த்தகம், வங்கித்தொழில், கமத்தொழில், கைத்தொழில், தொழில்நுட்பம் மற்றும் சட்டம் ஆகிய துறைகளில் அனுபவமும் அறிவுமுள்ள ஆட்களுக்கிடையே இருந்து தெரிவுசெய்யப்படும் ஏழு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்.

(2) அமைச்சரானவர், சபையின் உறுப்பினர்களில் ஒருவரை தவிசாளராகவிருக்கவென நியமித்தல் வேண்டும்.

*சபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கான தகைமையீனம்.*

**4.** ஆளொருவர் -

(அ) பாராளுமன்றத்தின், அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினராகவிருப்பின் அல்லது வரின் ;

(ஆ) இலங்கைப் பிரசையாக இராதிருப்பின் அல்லது இல்லாதொழியின் ;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின் ;

(ஈ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு உட்பட்டவராயிருப்பின் அல்லது உட்பட்டவராயிருந்திருப்பின் ;

(உ) அதிகாரசபையினால் அல்லது அதன்சார்பில் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருப்பின் அல்லது அனுபவித்திருப்பின் ;

(ஊ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆளொருவராக இருப்பின் அத்துடன் கடனிறுக்க வகையற்ற அல்லது வங்கி முறிந்தவராக பொறுப்பு விடுவிக்கப்படாத ஆளொருவராக இருப்பின்.

*உறுப்பினர்களின் பதவி அகற்றலும் பதவி விலகலும்.*

**5.** (1) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவருடைய பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது அமைச்சரால் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) அமைச்சர் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) சபையின் உறுப்பினரொருவர் இறக்கின்றவிடத்து, பதவி விலகுகின்றவிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றவிடத்து அமைச்சர், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு அவருடைய இடத்தில் செயலாற்றவென இன்னொரு உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

*உறுப்பினர்களின் பதவிக் காலம்.*

**6.** (1) ஐந்தாம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் அவர் இறப்பின்மூலம், பதவி விலகல் மூலம் அல்லது அகற்றப்படுதல்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய மூன்று ஆண்டுகளாதல் வேண்டும் என்பதுடன், பதவியகற்றப்பட்ட உறுப்பினர் தவிர்ந்த அத்தகைய உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(2) பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சபையின் உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது அதிகாரசபை வேறு ஏதேனும் ஆற்றலில் அதிகாரசபையில் ஏதேனும் தன்மையில் செயற்படுவதற்கு தகுதியுடையவராதல் ஆகாது.

சபையின் கூட்டங்கள்.

**7.** (1) சபையின் தவிசாளர் சமுகமாயிருப்பின் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைவகித்தல் வேண்டும். தவிசாளர் அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு வருகைதராதிருப்பின் அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமைவகிக்கவெனச் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தலும் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக சபையானது சபையின் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கொண்டு நடத்துதலையும் ஒழுங்குபடுத்தலாம்.

உறுப்பினர்களின் ஊதியம்.

**8.** சபையின் உறுப்பினர்கள், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அதிகார சபையின் நிதியத்திலிருந்து ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

வெற்றிடமொன்றின் காரணமாக செயல்கள் செல்லுபடியற்ற தாக்கப்படாமை.

**9.** சபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

அதிகார சபையானது அரசாங்கத்தின் பொதுவான கொள்கையுடன் இணங்கி யொழுகுதல் வேண்டும்.

**10.** அதிகாரசபையானது, தனது தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும், பணிகளை நிறைவேற்றுவதிலும் கடமைகளைப் புரிவதிலும் அரசாங்கத்தின் பொதுவான கொள்கையுடனும் மற்றும் அத்தகைய கொள்கையின் அமுலாக்கம் தொடர்பில் அமைச்சரினால் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் இலச்சினை.*

**11.** (1) அதிகாரசபையின் இலச்சினையானது, சபை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினையானது சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) தவிசாளரினதும் சபையின் இன்னுமோர் உறுப்பினரினதும் முன்னிலையில் அல்லாது அதிகாரசபையின் இலச்சினை ஏதேனும் சாதனம் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அவ்வுறுப்பினர்கள் இருவரும் அவர்கள் அங்கிருந்தார்கள் என்பதற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடல் வேண்டும் :

ஆயினும் அதிகாரசபையின் இலச்சினை ஏதேனும் சாதனம் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில் தவிசாளர் சமுகமளிக்க முடியாதவிடத்து, அதன் சார்பில் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் வேறு எவரேனும் உறுப்பினர் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய சாதனம் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு தகுதியானவராக இருத்தல் வேண்டும்.

(4) சபையானது, அதிகாரசபையின் இலச்சினை பொறிக்கப்பட்ட சாதனங்கள் அல்லது ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றினைப் பேணிவருதல் வேண்டும்.

*விசேட பொருளாதார வலயங்களின் பிரகடனமும் முகாமைத்துவமும்.*

**12.** (1) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரானவர், இலங்கையின் ஏதேனும் பாகத்தினுள் அமைந்துள்ளதும், அமைச்சரவையின் கலந்தாலோசனையின்மீது அதிகாரசபையினால் இனம்காணப்படவேண்டியதும், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை தேசிய பேரவைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி “உரிமப்படுத்தப்பட்ட வலயம் ஒன்று” அல்லது “ஏற்றுமதி முறைப்படுத்தல் வலயம்” ஒன்று என்று வெளிப்படுத்தப்பட்டவை தவிர்ந்த மேற்சொல்லப்பட்ட கட்டளையில் விபரிக்கப்பட வேண்டியதான ஏதேனும் காணி இடப்பரப்பினை “விசேட பொருளாதார வலயம்” ஒன்றாக வெளிப்படுத்தலாம்.

(2) அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப் பறிக்கை ஒன்றின்மீது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விசேட பொருளாதார வலயம் ஒன்றாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப் பொன்றை முகாமை செய்யும் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக ஒரு கம்பெனி கூட்டிணைக்கப்பட வேண்டுமென அமைச்சரவை கருதுகின்றவிடத்து, அமைச்சரவை, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனை யுடன், அமைப்பு அகவிதி மற்றும் அமைப்பு புறவிதியைக் கம்பெனிப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கும்படி அமைச்சரை பணிக்கலாம் என்பதுடன், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அத்தகைய கம்பெனியை பதிவு செய்யுமாறும் அத்தகைய பதிவாளரைப் பணிக்கலாம்.

(3) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும், பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்பினைப் பெறுவதன்மீது -

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பில் குறிப்பீடுசெய்யப்பட்ட பெயரில் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கூட்டிணைத்தல் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பகிரங்கக் கம்பெனியொன்று, அவ்வாறு கூட்டி ணைக்கப்பட்ட கம்பெனியின் அமைப்பு அகவிதி மற்றும் அமைப்பு புறவிதி என்பவற்றுக்கு இணங்க விசேட பொருளாதார வலயம் ஒன்றாக வெளிப்படுத் தப்பட்ட இடப்பரப்பொன்றை முகாமை செய்வதற்கான கட்டளையில் விதித்துரைக்கப்பட்ட பெயரில் கூட்டி ணைக்கப்பட்டிருக்கின்றது என பிரகடனப்படுத்து கின்ற கட்டளையொன்றை வர்த்தமானியில் வெளியிடல் வேண்டும்.

(4) கம்பெனியின் குறிக்கோள்கள் தத்துவங்கள், மற்றும் பணி கள் என்பன இதற்கான அட்டவணையில் தரப்பட்டவாறு இருத் தல் வேண்டும்.

## அதிகாரசபையின் குறிக்கோள்கள் மற்றும் சபையின் தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகள்

**13.** அதிகாரசபையின் குறிக்கோள்களானவை :- *அதிகாரசபையின் குறிக்கோள்கள்.*

(அ) இலங்கைக்குள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தியை ஊக்குவித்தல், மேம்படுத்துதல், மற்றும் வசதியளித்தல் என்பனமூலம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை வளர்ச்சி விரிவாக்குதலும் மற்றும் தூண்டுதலும் ;

(ஆ) அதிகாரசபையின் குறிக்கோள்களைப் பூர்த்திசெய்வதற்காக வெளிநாட்டுச் சந்தைகளை ஊடுருவும் ஆற்றல் கொண்ட உள்ளூர் தொழில் முயற்சிகளை சர்வதேசமயப்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட தொழில்முயற்சிகளை இலங்கைக்கு வெளியே தாபிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் தூண்டுதலும் ஊக்குவித்தலும் ;

(இ) தோதாக வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் திட்டங்களையும், மேம்படுத்தல் ஊக்குவிப்புகளையும் வகுத்தமைத்தலும் கைத்தொழிலிலும் மற்றும் கமத்தொழிலிலும், வர்த்தகம் மற்றும் அபிவிருத்திச் செயற்றிறனாக ஆதரித்தலும், மேம்படுத்துதலும் ;

(ஈ) தொழில்முயற்சி அபிவிருத்தியின் உள்ளார்ந்த பாகமொன்றாக தொழில்நுட்பத் திறனுடனான மனிதமூலதன அபிவிருத்தியில் மக்களை அதிகாரமளித்தல் ;

(உ) அபிவிருத்தித் தேவைகளை நிறைவுசெய்வதற்கு தேவைப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் ;

(ஊ) தொழில்முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டுக்குத் தேவைப்படுத்தப்பட்ட நிதிகளை அடைவதற்கு தொழில் முயற்சியாளர்களுக்கு வசதியளித்தல் ;

(எ) உற்பத்திப்பொருள் அபிவிருத்தி, தொழில்நுட்ப மேம்படுத்துகை மற்றும் ஆக்கவுரிமைகளை வர்த்தகமயமாக்கல் என்பவற்றுடன் தொடர்புபட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம் ஒன்றை தாபித்தல் ;

(ஏ) பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளித்தல்.

சபையின் தத்துவங்கள்.

**14.** அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக சபையானது, பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம் புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :-

(அ) அதிகாரசபையின் அபிப்பிராயப்படி, அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்தக்கூடியதாக அல்லது எய்துவதற்கு உதவக்கூடியதான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபட உத்தேசித்துள்ள எவரேனும் ஆள், பங்குடைமை அல்லது கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவுசெய்தலும் அத்துடன் அவருடன் அல்லது அவற்றுடன் உடன்படிக்கை செய்துகொள்ளுதலும் ;

(ஆ) பிராந்திய கைத்தொழில் மற்றும் வியாபார செயற்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கான ஆற்றலைக் கொண்டுள்ள இலக்குடைய தொழில்முயற்சியாளரை இனம் காணுதலும் ஊக்குவித்தலும் ;

(இ) அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக கைத்தொழில் அமைவிடங்கள் அல்லது நகர அபிவிருத்திக்காக காணியைக்கொள்ளுதலும் குத்தகைக்கு எடுத்தலும் ;

(ஈ) விசேட பொருளாதார வலயங்களின் அபிவிருத்திக்காக நிதியங்கள் மற்றும் வளங்களை வழங்குதல் ;

(உ) பொருளாதார அபிவிருத்திக்குத் தேவைப்படுத்தப்படும் அமைவிடங்கள், வலயங்கள், வளவுகள், உள்ளகக் கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தலும் முகாமை செய்தலும் ;

(ஊ) அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்துவதற்காக கம்பெனிகளைத் தாபித்தலும் அவற்றில் முதலீடு செய்தலும், வசதியளித்தலும் ;

(எ) இதனகத்துப்பின்னர் எடுத்துக்காட்டப்பட்ட முறையொன்றில் விசேட பொருளாதார வலயங்களை வெளிப்படுத்துதலும் அத்துடன் அத்தகைய வலயங்கள் தொழில்முயற்சி அபிவிருத்திக்காக வளர்ச்சி நிலையங்களாக இருத்தலும் ;

(ஏ) சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் அபிவிருத்திக்கு வசதியளித்தலுக்கான பிரதேசச் செயலாளர் பிரிவுகளுக்காக தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் சேவை நிலையங்களை தாபித்தலும் ;

(ஐ) கம்பெனிகளை தாபிப்பதற்காக கூட்டுமுயற்சி பங்காளர்களின் விண்ணப்பக் கட்டணம் மற்றும் விண்ணப்பிக்கும் முறை என்பவற்றை விதித்துரைத்தல் ;

(ஒ) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உள்ள அரசாங்கத்தின் நிதிசார் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, செயற்படுத்த வேண்டியதான கணக்கினை அல்லது கணக்குகளை அது தோதானதென கருதக்கூடியவாறு அத்தகைய வங்கி அல்லது வங்கிகளில் திறத்தலும் பேணுதலும் ;

(ஓ) தொழில்முயற்சிகள் அபிவிருத்தியை எய்துவதற்காக ஏதேனும் அரசாங்க திணைக்களம், அமைச்சு, உள்ளூர் அதிகாரசபை, மாகாண சபை அல்லது சர்வதேச ஒழுங்கமைப்புடன் இணைந்து செயற்படல் ;

(ஔ) இயைபான அதிகாரசபைகளின் ஒருப்பாட்டுடன் விசேட பொருளாதார வலயங்களினுள் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் பௌதீக அபிவிருத்தியை நிறைவேற்றுதல் ; அத்துடன்

(க) இச்சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை பிரயோகிப்பதன்மீது, நிறை வேற்றுவதன்மீது மற்றும் புரிவதன்மீது இடைநேர் விளைவான அல்லது விளைவாந்தன்மையதான, அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது கருமங் களையும் செய்தல்.

ஏதேனும் உடன் படிக்கையை செய்துகொள் வதற்கான சபையின் தத்துவங்கள்.

**15.** (1) சபையானது, அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிக்கும், புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக கூட்டுமுயற்சி உள்ளடங்கலாக எவரேனும் ஆள் அல்லது பங்குடைமையுடன் ஏதேனும் உடன் படிக்கையை செய்துகொள்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய ஒவ்வொரு உடன்படிக்கையும் எழுத்தில் இருத்தல் வேண்டும். அத்துடன் அதிகாரசபையுடன் பதிவுசெய்து கொள்வதன்மீது அதிகாரசபை, மற்றும் அத்தகைய அரசாங்கத் திணைக்களம், உள்ளூர் அதிகாரசபை அல்லது வேறு குழுக் களுக்கிடையே வலிதானதும் பிணிப்பதுமான ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குதலும் வேண்டும்.

இலங்கைக்கு வெளியே அதிகார சபைக்காக செயலாற்றுவதற்கு ஆட்களுக்குள்ள அதிகாரம்.

**16.** சபையானது, அதிகாரசபையின் இலச்சினையின்கீழ் அல்லது அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் இலங்கைக்கு வெளியே ஏதேனும் இடத்தில், அதிகாரசபைக்காக அல்லது அதன் சார்பில் செயலாற்றுவதற்கு ஒன்றில் பொதுவாக அல்லது ஏதேனும் குறித்த விடயம் தொடர்பில் வேறு எவரேனும் ஆளுக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

காணியினை கட்டாயமாகக் கொள்ளுதல்.

**17.** (1) பெயர்குறிப்பிடப்பட்ட ஏதேனும் இடப்பரப்பினுள் ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியில் உள்ள ஏதேனும் அக்கறை ஏதேனும் கருத்திட்டத்தின் அமுலாக்கத்திற்காக அதிகார சபையால் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்தும் அமைச்சரானவர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் உத்தேசிக்

கப்பட்ட கொள்ளுதலை அங்கீகரிக்கின்றவிடத்தும், அக் காணி அல்லது காணியில் உள்ள அக்கறை (460 ஆம் அத்தியாயமான) காணிகொள்ளல் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய காணி அல்லது காணியில் உள்ள அக்கறை பொது நோக்கமொன்றுக்குத் தேவைப்படுத்தப்படுகிறது என்றாற் போன்று அத்தகைய காணி அல்லது காணியில் உள்ள அக்கறை பொது நோக்கம் ஒன்றிற்காக தேவைப்பட்டிருக்கின்றவாறு அதிகாரசபைக்குக் கைமாற்றப்படலாம் :

ஆயினும், எவ்வாறாயினும் பெயர்குறிப்பிடப்பட்ட இடப்பரப் பினுள் அமைந்துள்ள தோட்டமொன்றின் ஏதேனும் காணி அல்லது காணியில் உள்ள ஏதேனும் அக்கறை அதிகாரசபையால் தேவைப்படுத்துகின்றவிடத்து அத்தகைய காணி அல்லது அத்த கைய காணியில் உள்ள அக்கறையைக்கொள்வதற்காக இப் பிரிவின்கீழ் கட்டளை ஒன்றை வெளியிடமுன்னர் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு என்னும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்ச ரைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(2) பெயர்குறிப்பிட்ட இடப்பரப்பிலுள்ள ஏதேனும் காணி அல்லது எதேனும் காணியிலுள்ள ஏதேனும் அக்கறை அதிகார சபையின் ஏதேனும் நோக்கத்துக்காகக் (460 ஆம் அத்தியாயமான) காணிகொள்ளல் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட இருக்கின்றவிடத் தும், அத்துடன் அக் காணியை அல்லது அக்கறையைக்கொள் வதற்கான எண்ணம் பற்றிய பகிரங்க அறிவித்தலானது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஆரம்பிக்கின்ற மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குள் வெளியிடப்பட்டும் இருக்கும் விடயம் எதிலும், அச்சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், அக்காணி அல்லது அக்கறை தொடர்பில் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்குப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடை யனவாதல் வேண்டும் :—

(அ) காணியின் சந்தைப் பெறுமதியானது, அது கொள்ளப் படும்போது இருந்த அதேநிலையில் அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று இருந்திருந்தால் அக்காணிக்கு என்ன சந்தைப் பெறுமதி இருந்திருக் குமோ அச்சந்தைப் பெறுமதியுடன் அத்தகைய தேதிக்

குப் பின்னர் அத்தகைய காணிக்கு நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட திருத்தங்கள் எவையும் இருந்தால், அவற்றுக்காக நியாயமான அளவு அதிகரிக்கப்பட்ட தொகையொன்றாகவும் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று காணியில் சந்தைப் பெறுமதியை நிர்ணயிக்கையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அதிகார சபையினால் செய்யப்பட்ட ஏதேனும் அபிவிருத்தி வேலையிலிருந்து அல்லது வேறு செயற்பாட்டிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வந்துற்றிருக்கக்கூடிய ஏதேனும் நன்மை அல்லது பெறுமதி அதிகரிப்பு அல்லது வந்துறக்கூடிய சாத்தியக்கூறுகள் நன்மையின் ஏதேனும் எதிர்பார்ப்பு அல்லது பெறுமதியின் அதிகரிப்பு எதுவும் கருத்தில்கொள்ளப்படுதலாகாது.

*அசைவுள்ள ஆதனம் அதிகார சபைக்கு கிடைக்கக் கூடியதாகச் செய்வித்தல்.*

**18.** அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை அதிகார சபையின் ஏதேனும் நோக்கத்திற்காக தேவைப்படுத்துகின்றவிடத்து, அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய அசைவுள்ள சொத்தின் உடமையையும் பயன்பாட்டையும் அதிகாரசபைக்கு கைமாற்றி அதிகாரசபைக்கு உரித்தாக்கலாம் :

ஆயினும், எவ்வாறாயினும் அரசுக்குச் சொந்தமான ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை பாதிக்கின்ற கட்டளை எதுவும் அத்தகைய ஆதனத்தின் மீது கட்டுப்பாட்டைக்கொண்டுள்ள அமைச்சரின் ஒருப்பாடின்றி இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரால் ஆக்கப்படலாகாது.

## நிதி

*அதிகாரசபையின் நிதியம்.*

**19.** (1) அதிகாரசபையானது நிதியமொன்றை தாபித்து பேணி செயற்படுத்த வேண்டும் ; அத்துடன் பின்வருவன அந்நிதியத்திற்குள் செலுத்தப்பட வேண்டும் :-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதில் நிறைவேற்றுவதில் அல்லது புரிவதில் அதிகாரசபையால் பெறப்படக்கூடியதான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(இ) கொடை, மானியக்கொடை அல்லது நன்கொடை என்றவகையில் அதிகாரசபையில் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) அதிகாரசபையில் வரவுக்குள் செலுத்தப்படவேண்டிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் எழுத்திலான வேறு சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்களை கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதில், நிறைவேற்றுவதில் அத்துடன் புரிவதில் அதிகாரசபையினால் உறப்பட்ட செலவினங்களைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுகின்றதான அத்தகைய எல்லாத் தொகைகளும், அத்துடன் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு தேவைப்படுகின்றதான அத்தகைய எல்லாத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டும். தொழில்நுட்ப அபிவிருத்தியின் நோக்கத்துக்காக ஒதுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் அத்தகைய நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும். அதிகாரசபையானது எந்த தொழில்நுட்ப அபிவிருத்திப் பகுதிக்கு அத்தகைய நிதியத்திலிருந்து பணம் செலுத்தப்பட வேண்டுமோ அந்த தொழில்நுட்ப அபிவிருத்திப் பகுதியை இனம் காணல் வேண்டும்.

**20.** (1) அதிகாரசபையின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப் புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## அதிகாரசபையின் பணியாட்டொகுதி

பணிப்பாளர் தலைமையதிபதி.

**21.** (1) அதிகாரசபையின் தவிசாளர், அதிகாரசபையின் பணிப்பாளர்—தலைமையதிபதியாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், சபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அதிகாரசபையின் அலுவல்கள் மற்றும் கொடுக்கல் வாங்கலுடனுமான பணிப்புக்கும் அதனுடைய தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை என்பனவற்றைப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் மற்றும் அதிகாரசபையின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் அவ்வாறு செய்வது அவசியமானதென அவர் கருதுகின்ற போதிலெல்லாம் இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் பணி அல்லது கடமையை எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளருக்கு கையளிக்கலாம். அத்துடன் அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் பணிப்பாளர், தலைமையதிபதியின் பொதுவாக அல்லது விசேட பணிப்புக்கு அமைவாக அத்தகைய தத்துவத்தை, பணிகளை அல்லது கடமையைப் பிரயோகித்தலும் நிறைவேற்றலும் மற்றும் புரிதலும் வேண்டும்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதி

**22.** (1) அதிகாரசபையானது அதனுடைய பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அத்தகைய முறையொன்றிலும் அத்தகைய வீதத்திலும் ஊதியமளிக்கப்பட வேண்டுமென்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தலும் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரின் அலுவலரின் சம்மதத்துடனும் பொதுநிர்வாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்

சரின் அமைச்சுச் சேவையாளரின் சம்மதத்துடனும் அதிகார சபையில் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையில் எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படு கின்றவிடத்து 1991 ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்ற விடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர் பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல்.

(6) அதிகாரசபை குறித்துரைக்கப்பட்ட காலமொன்றிற்கு அரசாங்க சேவைக்கு உடன்பட்டு எவரேனும் ஆளை தொழிலுக் கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் ஆற்றப்படும் அதிகார சபைக்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி அத்தகைய உடன் படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரசபையின் வேண்டுதலின் பேரில் உள்ளூராட்சி சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூர் அதிகார சபையின் எவரேனும் வேறு அலுவலர் அல்லது சேவையாளர் விடயத்திற்கேற்ப அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல் லது சேவையாளரின் அத்துடன் முறையே உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவின் அல்லது உள்ளூர் அதிகாரசபையின் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நிய மிக்கப்படலாம் அல்லது அதிகாரசபையினாலும் உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவினாலும் அல்லது உள்ளூர் அதிகாரசபை யினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறான ஓய்வூதியம் அல்லது ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது அத்தகைய பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) உள்ளூர் அரசாங்க சேவையொன்றின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு (7) ஆம் உட்பிரிவின் கீழ் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து அவர் இவ்வதிகாரசபையின் பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினர் போன்று அதே ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

அதிகாரசபையின் பணியாட் டொகுதிக்கு பகிரங்கக் கூட்டுத்தாப னத்தின் அலுவலர்கள் மற்றும் சேவை யாளர்களை நியமித்தல்.

**23.** (1) அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளரின் அவரை சம்மதத்துடனும் அவரை ஆளுகின்ற சபையினது சம்மதத்துடனும் அல்லது அதேபோன்ற சம்மதத்துடனும் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதிகாரசபையினால் மற்றும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுகின்ற சபையினால் உடன்படக்கூடியவாறான ஓய்வூதியம் அல்லது ஊழியர் சேமலாப நிதிய உரிமைகள் தொடர்பில் அத்தகைய நியமித்தனைகள் மீது அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படலாம்.

(2) எவரேனும் ஆள், அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நியமிக்கப்படுகின்றவிடத்து, அவர் அதிகாரசபையின் பணியாட் தொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினர் போன்று அதே ஒழுக்கக் கட்டுப் பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக பகிரங்க கூட்டுத்தாபனம் ஒன்று தொடர்பில் "ஆளுகின்ற சபை" என்பது பணிப்பாளர்கள் சபை அல்லது எந்த வேறு குழுவில் அப்பகிரங்கக் கூட்டுத்தாபனம் உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்தக் குழுவின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் எனப் பொருள்படும்.

## பொதுவானவை

அதிகார சபையானது அபிவிருத்தி கருத்திட்டங்களின் பயன்பாட்டை நிறைவேற்றுவதற்கு கொடுக்கப்பட்ட நிதியுதவிகளை உறுதிப்படுத்தல்.

**24.** ஏதேனும் விசேட பொருளாதார வலயத்தினுள் அபிவிருத்தி கருத்திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்காக எவரேனும் ஆளுக்கு ஏதேனும் நிதிசார் உதவிகள் எந்த நோக்கத்திற்காக அதிகாரசபையினால் கொடுக்கப்பட்டனவோ அந்த நோக்கத் திற்காக அது பயன்படுத்தப்பட்டதென்பதனை உறுதிப்படுத்து வதற்கு அவசியமாக இருக்கக் கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் அதிகாரசபை எடுத்தல் வேண்டும்.

**25.** எந்த தொழில் முயற்சியொன்றுடன் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர் பங்காளர், பணிப்பாளர் அல்லது பங்குதாரராக இருக்கின்றாரோ அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறை கொண்டுள்ளாரோ அந்தத் தொழில்முயற்சியுடன் ஏதேனும் அதிகாரசபையானது, அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி வியாபார கொடுக்கல்வாங்கலில் அல்லது வேறு ஏதேனும் வழியில் அத்தொழில் முயற்சியில் முதலீடு எதனையும் செய்ய முடியாது.

*அதிகாரசபையானது எந்தத் தொழில்முயற்சியுடன் உறுப்பினர் ஒருவர் அக்கறைகொண்டுள்ளாரோ அந்தத் தொழில் முயற்சி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி அதனுடன் வியாபார கொடுக்கல் வாங்கலை செய்ய முடியாமை.*

**26.** (1) அமைச்சரானவர், அதிகாரசபையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தத்துவங்களை பிரயோகிப்பதற்குமான பொதுவான அல்லது விசேட பணிப்புக்களை எழுத்தில் அதிகாரசபைக்குக் கொடுக்கலாம். அத்தகைய பணிப்புகளுடன் இணங்கியொழுகுதல் அத்தகைய அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

*அமைச்சரின் பணிப்புக்கள்.*

(2) அமைச்சரானவர், அதிகாரசபையின் ஆதனம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அவர் தேவைப்படுத்தக் கூடிவாறான விபரத் திரட்டுக்கள், கணக்குகள் மற்றும் வேறு தகவலை அத்தகைய வடிவத்தில் அவருக்கு கொடுத்துதவும்படி அதிகாரசபையைக் காலத்திற்குக் காலம் எழுத்தில் பணிக்கலாம். அத்தகைய பணிப்புடன் இணங்கியொழுகுவது அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

**27.** அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதற்கு அச்சட்டத்தின் ஏற்பாடுகள், அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*அதிகாரசபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப் படுத்தபட்ட நிறுவனமொன்றாக கருதப்படுதல்.*

அதிகாரசபையின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சேவை யாளர்கள் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல்.

**28.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் மற்றும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

செலவுகள் மீளளிக்கப்படல்.

**29.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபைக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட அல்லது அதிகாரசபையினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் அதிகாரசபையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின் மீது எவரேனும் ஆள் ஒருவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவினம் அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால் அத்தகைய செலவினங்கள், அத்தகைய துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டிருந்தாலன்றி அதகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**30.** (1) அமைச்சர், அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் இச்சட்டத்தினால் எந்த கருமங்கள் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அல்லது ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அந்த கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியின்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்.

**31.** அதிகாரசபையானது —

(அ) கூட்டங்களிலான நடபடியை ஒழுங்குபடுத்துவதற்கும் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கும்;

(ஆ) அதனுடைய இலச்சினையின் கட்டுக்காப்பிற்கும் அதனைப் பொறிக்கின்ற முறைக்கும் ஏற்பாடு செய்வதற்குமான,

விதிகளை ஆக்கலாம்.

தீர்வைக் கொடுப்பனவு ஆகியவற்றிலிருந்து அதிகார சபையினை விலக்களித்தல்.

**32.** அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் நாட்டிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு விசேட கவனம் செலுத்தி, தொழில்முயற்சி அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும், வசதியளிப்பதற்கும் கொள்கை மற்றும் நிறுவனப்படுத்தப்பட்ட ஆதரவை வழங்குவதற்காகவும் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் நியதிகளின்படி அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய தீர்வை, விதிப்பனவு, அல்லது வரி என்பனவற்றினை ஆளுகின்ற அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப்படுகின்றதான அத்தகைய அளவுக்கு அதிகாரசபையின் வருமானங்கள் அல்லது இலாபங்கள்மீது ஏதேனும் தீர்வைகள், விதிப்பனவுகள் மற்றும் ஏதேனும் வரியில் கொடுப்பனவிலிருந்து அதிகாரசபையை விலக்களித்தல் வேண்டும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு குறித்த சில தத்துவங்கள் உரித்தாக்கப் படுதல்.

**33.** (1) பன்னிரண்டாம் பிரிவின் நியதிகளின்படி இடப்பரப் பொன்றின் வெளிப்படுத்துகை மீது, அதிகாரசபைக்கு 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அமுலாக்கத்திற்கு அவசியமான தத்துவங்கள் உரித்தாக்கப்படல் வேண்டும்.

(2) பன்னிரண்டாம் பிரிவின் நியதிகளின்படி இடப்பரப் பொன்றின் வெளிப்படுத்துகைமீது,அங்ஙனம் வெளிப்படுத்தப் பட்ட இடப்பரப்பில்பௌதீக திட்டமிடல்தொடர்பில், எந்த அமைச்சருக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பொறுப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் கலந்தாலோசனையின்படி ஒழுங்குவிதிகளை ஆக்குதல் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும் அது, அமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

**34.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**35.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலொழிய —

"அபிவிருத்திக் கருத்திட்டம்" என்பது, பன்னிரெண்டாம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்தப்பட்டதும் அத்துடன் உற்பத்தியை, வருமானத்தை, தொழில்வாய்ப்பை உருவாக்குகின்றதும் அல்லது ஏதேனும் விசேட பொருளாதார வலயத்தின் பொருளாதார, சமூக, கலாசார அல்லது சூழல் நிலைமைகளை வேறுவகையில் முன்னேற்றுகின்றதுமான பகிரங்கமானதோ அல்லது தனியாரினதோ ஆன ஏதேனும் செயற்பாடு எனப் பொருள்படும் ; அத்துடன்

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை மற்றும் ஏதேனும் அத்தகைய சபை அல்லது சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையினை உள்ளடக்குகின்றது எனப் பொருள்படும்.

**அட்டவணை**

(பிரிவு 12(4))

1. கம்பெனியின் குறிக்கோள்கள் ஆவன :—

(அ) கம்பெனி தனது நோக்கெல்லையின்கீழ் விசேட பொருளாதார வலயத்தினுள் பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையான வளங்களை மேம்படுத்தல் ;

(ஆ) கம்பெனி தனது நோக்கெல்லையின்கீழ் வலயத்தினுள் உற்பத்தி செய்தல், கமத்தொழில் சேவைகளை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும் ;

(இ) அடிப்படைப் பொருளாதாரத்தை பரவலாக்கலும் பலப்படுத்தலும்.

2. கம்பெனியின் பணிகளும் தத்தவங்களும் —

(அ) பிராந்தியங்களினுள் கைத்தொழில், கமத்தொழில் மற்றும் வியாபார தொழில் முயற்சிகளை நிறுவுவதற்கும் விசாலிப்பதற்குமான ஊக்குவிப்பதற்கு வசதிகளை வழங்குதல் ;

(ஆ) உள்ளூர் தொழில் முயற்சியாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர வியாபார தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கு ஆரவளித்தலும் அத்துடன் உள்ளூர் கம்பெனிகளை விரிவுபடுத்தல் மற்றும் தரமுயர்த்துதலுக்கு உதவுதலும் ;

(இ) இலக்குடைய கம்பெனிகளை இனம் காணுதலும் ஊக்குவித்தலும், இலங்கையில் பிராந்திய சேவைகள் மற்றும் வியாபார சேவைகளைப் பரந்த அடிப்படையில் பொறுப்பேற்றலும் ;

(ஈ) ஆதரவான கைத்தொழில் சேவைகளின் அபிவிருத்தியை மேம்படுத்தலும் உதவுதலும் ;

(உ) அமைவிடங்கள், வலயங்கள், பூங்காக்கள், தோட்டங்கள் அத்துடன் வேறு வளவுகள் அத்துடன் பிராந்தியத்தினுள் கைத்தொழில்களுக்கான உட்கட்டமைப்பு தேவைகள், கமத்தொழில் மற்றும் வியாபாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்தலும் முகாமை செய்தலும் ;

(ஊ) தொழில்நுட்பத்தின் முதலீடு, பயிற்சியளித்தல், ஆராய்ச்சி, உற்பத்தி அபிவிருத்தியூடாக அவர்களுடைய திறன்கள் மற்றும் தொழில்நுட்ப மட்டங்களைத் தரமுயர்த்துவதற்காக கைத்தொழில் மற்றும் கமத்தொழிலை ஊக்குவித்தல் ;

(எ) கைத்தொழில் நகரமயப்படுத்தலை அபிவிருத்தி செய்தலும் மற்றும் முகாமை செய்தலைத் திட்டமிடுதலும் ;

(ஏ) இடப்பரப்பொன்றில் வாழ்கின்ற ஆட்களின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் சமூக வாழ்வு வசதிகளை வழங்குதல் ; அத்துடன்

(ஐ) வங்கிகள் மற்றும் வேறு கடன் வழங்கும் நிறுவனங்களில் இருந்து பணத்தைக் கடனெடுத்தல்.

தொழில்
டம்

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*